# “அந்துருண்டைகள்” (Moth Balls) மற்றும் “கழிவறை மணம் அகற்றிக் கட்டிக” (Toilet Deodorant Cakes) ளில் உள்ள நெப்தலீன்

## What is Naphthalene? / Naphthalene என்றால் என்ன?

சில அந்துருண்டைகளிலும் கழிவறை மணம் அகற்றிகளிலும் நெப்தலீன் என்றழைக்கப்படும் ஒரு பதார்த்தம் இருக்கிறது. நேப்தலீன் ஒரு தனித்தன்மையான மணத்தைக் கொண்ட உறுதியான வெள்ளைச் சாதனம். இது இயற்கையாக நிலக்கரி மற்றும் எண்ணெய் போன்ற படிசல் எரி பொருட்களில் காணப்படும்.

## நான் எப்படி நெப்தலீனிலால் பாதிப்படையக்கூடும்?

நீங்கள் நெப்தலீன் உள்ள காற்றை உள்ளிழுத்தால், நெப்தலீன் உள்ள திரவங்கள் எதையும் அருந்தினால், அல்லது நெப்தலீன் உள்ள உற்பத்திப் பொருட்களை தொட்டால் அல்லது தற்செயலாக உண்டால் நெப்தலீன் பாதிப்பு ஏற்படும். அந்துருண்டைகளால் பாதுகாக்கப்பட்ட உடைகளிளிலிருந்து வெளிவரும் நெப்தலீன் ஆவிகளை நீங்கள் சுவாசிக்கக் கூடும் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.

## நேப்தலீன் உங்களது உடல்நலத்தை எப்படி பாதிக்கும்?

கூடிய அளவு நெப்தலீன் தாக்கத்திற்கு ஆளாவது உங்களது இரத்த அணுக்களை சேதப்படுத்தி haemolytic anaemia என்று அழைக்கப்படும் நிலைமைக்கு இட்டுச் செல்லும். நெப்தலீன் இருக்கும் அந்துருண்டைகளை உட் கொண்ட குழந்தைகளை உள்ளடக்கிய நபர்களுக்கு இந்த நிலைமை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. களைப்பு, உண்ண விருப்பமின்மை, குமட்டல், வாந்தி, மற்றும் வயிற்றுப் போக்கு ஆகியவை பெருமளவு நெப்தலீன் பாதிப்பினால் ஏற்படும் அறிகுறிகள் ஆகும். தோல் வெளிரிப் போகலாம் அல்லது மஞ்சள் நிறமாக மாறலாம். குறிப்பாக, நெப்தலீன் பாதிப்பால் புதிதாய்ப் பிறந்த குழந்தைகளின் இரத்த அணுக்கள் சேதமடையும் அபாயம் இருக்கிறது. அவர்களது இரத்த அணுக்கள் சேதமடைவதால் bilirubin என்று அழைக்கப்படும் ஒரு வஸ்து வெளிப்பட்டு அது குழந்தையை மஞ்சள் நிறமாக மாற்றும், மற்றும் சில கடுமையான சூழ்நிலைகளில் மூளையை இது பாதிப்படையச் செய்யலாம். G6PD deficiency என்றழைக்கப்படும் மரபியல் இரத்த நோயுடன் பிறப்பவர்களை நெப்தலீன் எளிதில் பாதிக்கும் என்பதால், ஒரு சிறு அளவு நெப்தலீன் தாக்கம் கூட நோயின் அறிகுறிகளைத் தோற்றுவிக்கலாம். நெப்தலீன் பாதிப்பினால் ஏற்படும் எந்த அறிகுறிகள் தென்பட்டாலும் உடனடியாக வைத்தியர் ஒருவரைப் பார்க்க வேண்டும். நெப்தலீன் மக்களுக்கு புற்று நோயை உண்டு பண்ணலாம் என்பதற்கு நேரடியான சான்றுகள் எதுவும் இல்லை.

## நெப்தலீனை எப்படிப் பாதுகாப்பாக உபயோகிக்க முடியும்?

வயது வந்தவர்களும், வளர்ந்த பிள்ளைகளும் வசிக்கும் வீடுகளில் நெப்தலீன் இருக்கும் அந்துருண்டைகளை சரியான அளவிலும் சரியான வகையிலும் உபயோகிப்பது பொதுவாக பாதுகாப்பானது. மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகள் உள்ள இடங்களில் நெப்தலீன் உபயோகம் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று அவுஸ்திரேலிய விதிமுறைகள் பரிந்துரைக்கின்றன. சிறுவர்களின் போர்வைகள் மற்றும் உடைகளில் நெப்தலீன் இருக்கும் அந்துருண்டைகள் வைக்கப்படக் கூடாது, மற்றும் சிறுவர்களின் அறைகள், அல்லது சிறுவர்கள் இருக்கும் அல்லது செல்லும் பகுதிகளில் நெப்தலின் அந்துருண்டைகள் உபயோகிக்கப்படக் கூடாது என்பதே இதன் பொருளாகும். சிறுவர்களின் போர்வைகள் அல்லது உடைகள் கவனக்குறைவாக நெப்தலீன் உள்ள அந்துருண்டைகளால் பாதுகாத்து வைக்கப் பட்டிருந்தால், அந்த உடைகளை வீட்டிற்கு வெளியே எடுத்துச் சென்று நெப்தலின் மணத்தைப் போக்கி, உபயோகிக்குமுன் ஆடைகளைத் துவைக்க வேண்டும்.

அந்துருண்டைகளை உண்பது மிகவும் அபாயகரமானதாகலாம் என்பதால் இவற்றை சிறுவர்கள் மற்றும் செல்லப் பிராணிகளுக்கு எட்டாதவாறு இருப்பில் வைப்பது மிகவும் முக்கியம்.

அத்தோடு, உங்களுக்கோ அல்லது உங்களது நேரடியான குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கோ மரபியல் இரத்தக் கோளாறு இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருந்தால் நெப்தலீன் அடங்கிய உற்பத்திப் பொருட்களைத் தவிர்க்க வேண்டும்.

*உங்களுக்கு நெப்தலீனிலால் ஏற்படும் உடல்நல அபாயங்கள் பற்றிய மேலதிக அறிவுரை தேவைப்பட்டால், அவுஸ்திரேலியா முழுதும் வாரம் ஏழு நாட்களும் நாளொன்றிற்கு 24 மணித்தியாலமும் NSW Poisons Information Centre எனும் அமைப்பினை 13 11 26 என்ற இலக்கத்தில் அழைப்பதன் மூலமாகவோ அல்லது உள்ளூர் Public Health Units - இலோ பெற்றுக் கொள்ளலாம்.*

| **Metropolitan Areas** | **Location** | **Number** | **Rural Areas** | **Location** | **Number** |
|---|---|---|---|---|---|
| Northern Sydney/Central Coast | Hornsby | 02 9477 9400 | Greater Southern | Goulburn | 02 4824 1837 |
| | Gosford | 02 4349 4845 | | Albury | 02 6080 8900 |
| South Eastern Sydney/ Illawarra | Randwick | 02 9382 8333 | Greater Western | Broken Hill | 08 8080 1499 |
| | Wollongong | 02 4221 6700 | | Dubbo | 02 6841 5569 |
| Sydney South West | Camperdown | 02 9515 9420 | | Bathurst | 02 6339 5601 |
| Sydney West | Penrith | 02 4734 2022 | Hunter/New England | Newcastle | 02 4924 6477 |
| | Parramatta | 02 9840 3603 | | Tamworth | 02 6767 8630 |
| Justice Health Service | Matraville | 02 9311 2707 | North Coast | Port Macquarie | 02 6588 2750 |
| | | | | Lismore | 02 6620 7500 |

www.health.nsw.gov.au/publichealth/infectious/phus.asp எனும் இணையப் பக்கத்தில் Public Health Units குறித்த முழு விவரங்களைப் பார்க்கவும்.

## மொழிபெயர்த்துரைப்புச் சேவைகள்

மேலே கூறப்பட்ட சேவைகளுடன் தொடர்பு கொள்ளவோ அல்லது மொழிபெயர்ப்பிலோ உதவி தேவைப்பட்டால் தயவு செய்து Translating and Interpreting Service (TIS) -ஐ 13 14 50 -இல் அழையுங்கள்.

வேறு பன்மொழி உடல்நல தகவலுக்கு www.mhcs.health.nsw.gov.au எனும் வலைத்தளத்தைப் பாருங்கள்